திட்டத்தில் வராதவர்கள் இருக்கிறார்கள். அதிலே சில பகுதிகளைத் தேர்ந்தெடுத்து மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறது. அது வந்ததற்குப் பின்னாலே இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதையெல்லாம் சேர்த்து பரிசீலிக்கப்படும்.

திண்டுக்கல்லில் தோல் ஆராய்ச்சிக் நிலையம்.

792—(*வினா எண் 4866) திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லில் தோல் (Finishing Unit) சம்பந்தப்பட்ட தோல் ஆராய்ச்சி நிலையம் அமைக்க திண்டுக்கல் சிறுமலை அடிவாரத்தில் சர்வே எடுக்கப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. பிரேம்குமார்: தலைவர் அவர்களே, தோல் பொருள்களை மிக அதிகமாக ஏற்றுமதி செய்யும் இடமாகவும், பினிஷ்ட் புராடக்ட்சை அதிக அளவிற்கு செய்யக்கூடிய இடமாகவும் திண்டுக்கல் வளர்ந்து வருகிறது. தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் ஏற்படும் பாதகங்களைத் தடுக்க இப்படிப்பட்ட தோல் ஆராய்ச்சி நிலையம் ஒன்று அங்கே அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே, திண்டுக்கல்லைப் பொறுத்த வரையில் ஏறக்குறைய 60 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதிலே, 11 தொழிற்சாலைகளில் காலணிகள் மட்டும் தயாரித்து நாட்டிற்கு தந்து கொண்டிருக்கிறார்கள். தொழில் வணிகத் துறை மூலமாக அவர்கள் கட்டுப்பாட்டின்கீழ் வண்ணத் தோல் தொழில் பயிற்சிக்கூடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் தேசிய சிறுதொழில் நிறுவனம் திண்டுக்கல்லில் தோல் தொழிலை நவீனப்படுத்த துணை நிலையம் ஒரு இலட்சத்து 68 ஆயிரம் ரூபாயில் ஒரு தொழில் கூடத்தை 12–1–1986 முதல் துவங்கி அதிலே பயிற்சி தந்து கொண்டிருக்கிறது. அங்கே ஏறக்குறைய 10 நபர்கள் 3 மாத காலத்திற்கு பயிற்சி பெறுகிறார்கள். அந்த 10 பேரும் ஆதிதிராவிட மக்கள், பின்தங்கிய வகுப்பினர் ஆவார்கள். பயிற்சி முடிந்த பிறகு அவர்களுக்கு ஏறக்குறைய 25 ஆயிரம் ரூபாய் செலவில் இயந்திரங்கள், சாதனங்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.